**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

# திராவிடப் போராளிகள் 22

■ வழக்கறிஞர் அருள்மொழி




# மிராண்டா ‘ஏற்றிய’ கொடி!

*29.9.1945* அன்று திருச்சியில் திராவிடர் கழக மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார் **மிராண்டா கஜேந்திரன்.** அவர் ஏற்றியகொடிதான். ஆனால் அந்தக் கொடி குறித்துத் தனது உரையில், ஒரு மாற்றுக் கருத்தை முன்வைத்தார் ‘மிராண்டா’ கஜேந்திரன்.

“திராவிட மக்கள் என்பவர்களில், ஒரு சில படித்தவர்களும், பணக்காரர்களும், சட்டசபையினர் களாவதற்கோ, சமூக இயலில் நம்முடைய மக்கள் இழிநிலையில் வைக்கப்பட்டுள்ள களங்கத்தை மாற்றாது, அரசியலில் மட்டும் ஒரு குறிப்பிட்ட உயர்ஜாதியாரை மட்டும் எதிர்ப்பதற்காகவோ அல்லது காய்வதற்காகவோ இத்தனை நாட்கள் இக்கொடி பயன்படுத்தப்பட்டு வந்தது போல இனியும் இது பயன்படுத்தப்பட்டு வருவதுதான் சரி என்று கொள்ளப்படுமானால், இக்கொடி உயர்த்தப்படுவதைக் காட்டிலும் கிழித்தெறியப்படுவது மேல் என்பதே என்னுடைய உறுதியான கருத்தாகும்”

**தான் ஏற்றிவைத்த கொடியையே கொடியேற்றியவர் விமர்சனம் செய்து பேசுவதை நினைத்துப் பார்க்கவே முடியாது. ஆனாலும், பேசினார், மிராண்டா கஜேந்திரன்.** அதுதான் திராவிட இயக்கத்தின் சிறப்பு. அதன் பிறகுதான் திராவிடர் கழகத்துக்குப் புதிய கொடியை வடிவமைக்க வேண்டிய ஆலோசனைகளை வரவேற்று அறிக்கை வெளியிட்டார் தந்தை பெரியார்.

## எதற்காகப் புதுக்கொடி ?

*27.8.1944* அன்று சேலம் மாநகரில் கூடிய ‘நீதிக்கட்சி’ மாநாட்டில் நீதிக்கட்சி, ‘திராவிடர் கழக’மாகப் பெயர் மாற்றம் பெற்றது. ஆனால், நீதிக்கட்சியின் தராசுக்கொடியே தொடர்ந்து, திராவிடர் கழகத்தின் கொடியாகப் பயன்படுத்தப் பட்டு வந்தது.

ஓராண்டுக்குப்பின் அந்தக் கொடியை மாற்ற வேண்டும் என்று ஒரு பெரும் அரசியல் மாற்றத்தைத் தனது உரையில் முன்மொழிந்த மிராண்டா கஜேந்திரன் அவர்கள், “நாம் வேண்டுவது தலைகீழ் மாறுதல் -புரட்சி. இன்னல் செய்யும் ஆரியத்தை சின்னாபின்னமாக்க ஒரு சின்னம் தேவை. தராசு புரட்சியைக் குறிக்கும் சின்னம் ஆகாது... ஆகவே நீங்களனைவரும் இது விஷயமாய் நெடுநேரம் விவாதித்து, விசாரணை செய்து, புத்துலகிற்கும், புதுவாழ்விற்கும் வழிகாட்டக்கூடிய தீவிரமான ஒரு புரட்சிச் சின்னத்தை ஏற்படுத்துமாறு வேண்டிக் கொண்டு... இக்கொடியை உயர்த்தி வைக்கிறேன்” என்று அதற்கான காரணத்தையும் விளக்கமாக முன்வைத்தார் .

**திராவிட இயக்கத்திற்கான கொடி உருவாக்கப்பட்ட வரலாறு மிராண்டா அம்மையாரின் வரலாற்று உரையை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்.**

அவரது உரையால் தொடங்கிய அந்த விவாதம் தான், கருப்பு சிவப்பு வண்ணங்களைக் கொண்ட திராவிடர் கழகக் கொடி உருவாகக் காரணமாக அமைந்தது. மேலும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் சமூக ஆதிக்கத்தை ஒழிக்காமல், அவர்களை அரசியலில் மட்டும் எதிர்ப்பது பயன்தராது என்பதால்தான் நீதிக்கட்சி என்ற அரசியல் இயக்கம், ஏன் திராவிடர் கழகம் என்ற சமுதாய இயக்கமாக மாறியது என்ற தெளிவும் கிடைத்தது.

## யார் அந்த வீரப்பெண் மிராண்டா?

தந்தை பெரியாரின் தமையனார் ஈ.வெ.கிருஷ்ணசாமி அவர்களின் மூத்த மகள்தான் மிராண்டா. **‘சொல்லின் செல்வர்’ சம்பத்** அவர்களின் தமக்கை. அவருக்கு வைக்கப்பட்ட பெயர் தீனதயாளு. பெரியார் குடும்பத்தின் முதல் பெண்குழந்தை. அறிவும் சுறுசுறுப்பும் கொண்ட துடிப்பான சிறுமி. அவரை எப்படியாவது உயர் கல்வி படிக்கவைக்க வேண்டும் என்றார் பெரியார்.

வீடு முழுக்க இயக்கத் தோழர்கள், எந்த நேரமும் ஆலோசனைக் கூட்டம், விருந்து படைத்தல் என இருந்த அந்தச் சூழ்நிலையில் அப்பெண் குழந்தைக்கு நல்ல கல்வியைக் கொடுப்பது கடினம் என்பதால், சென்னையில் குஞ்சிதம் அம்மையாரின் பொறுப்பில் படிக்க வைக்கலாம் என்று முடிவு செய்தார். அதன்படி குஞ்சிதம் - குருசாமி அவர்களின் இல்லத்தில் தங்கிப் படிக்க, சென்னைக்கு அழைத்துச் செல்லப் பட்டார் தீனதயாளு. அப்போது அவருக்கு ஏழு வயது. கொள்கைக் குடும்பங்களின் உறவு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இதுவே சான்று.

## பெயர் மாற்றம்

ஆங்கிலப் புலமை கொண்ட குஞ்சிதம் அம்மையார், தீனதயாளு என்ற பெயர் பழமையாக இருக்கிறது என்று அவருக்கு ‘மிராண்டா’ என்று புதுப் பெயரைச் சூட்டினார். **‘மிராண்டா’** என்ற பெயர் ஷேக்ஸ்பியரின் **‘தி டெம்பெஸ்ட்’** *(THE TEMPEST* நாடகத்தில் வரும் மிக இனிமையான ஒரு பெண்ணின் பெயராகும். பெயர் மாற்றம் மட்டுமா? நீளத் தலைமுடியை வெட்டி, வசதியாக கிராப் வைத்து, கவுன் போட்டு, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள லேடி வெலிங்டன் பள்ளிக்கு அனுப்பப்பட்டார் மிராண்டா. அந்தப் பள்ளியில் கிராப் வைத்துக்கொண்டு படிக்கச் சென்ற ஒரே பெண்ணாக அவர் இருந்தார்.

பெரியாரின் குடும்பத்தில் கல்லூரிக்குச் சென்ற முதல் பெண்ணும் மிராண்டாதான். பள்ளி இறுதி வகுப்பான இன்டர்மீடியட் தேர்ச்சி பெற்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை ஆங்கில இலக்கியமும், பொருளாதாரமும் படித்தார் . பிறகு ஆசிரியர் பயிற்சியில் பட்டம் பெற்றார்.

## தாலி கட்டாதத் திருமணம்

1930-40 ஆம் ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திராவிடர் கழகத்தின் முன்னணி வீரர்களை உருவாக்கும் பாசறையாக இருந்தது. அவர்களில் முக்கியமான ஒருவர், மிராண்டா அம்மையாரின் மனம் கவர்ந்தவரான கஜேந்திரன் பி.ஏ., திருப்பத்தூரைச் சேர்ந்த நீதிக்கட்சிப் பிரமுகரான ‘சாமி’ என்பவரின் மகன்தான் கஜேந்திரன். அவர் பட்டம் பெற்ற பின்பு பெரியாரின் உதவியாளராக ஈரோடு சென்று பணியாற்றினார். **‘குடிஅரசு’** ஏடு மற்றும், **‘ஜஸ்டிஸ்’** ஆங்கில இதழின் பொறுப்பையும் கவனித்து வந்தார்.

மிராண்டா - கஜேந்திரன் இருவருக்கும் 24.5.1945 அன்று திருப்பத்தூரில் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. தாலி இல்லாமல் நடந்த திருமணம் என்பது கூடுதல் சிறப்பு. அவர்களது திருமணச் செய்தியை ‘குடிஅரசு’ இதழ் ‘தன்னுணர்வு, தாலி கட்டாதத் தம்பதிகள்’ என்ற தலைப்புடன் வெளியிட்டுள்ளது.

திருமணம் நடந்து நான்கு மாதங்கள் முடிந்த நிலையில்தான் திருச்சியில் திராவிடக் கொடிக்குப் புதிய சின்னம் வேண்டும் என்று எழுச்சி உரை ஆற்றினார் மிராண்டா அம்மையார். அம்மையாருக்கு சென்னை மாநகராட்சியில் ஆசிரியர் பணி கிடைத்தது. தனது சிறப்பான பணியால் கல்வித்துறை ஆய்வாளராகவும் உயர்நிலை அதிகாரியாகவும் பணி உயர்வு பெற்றார். அவரது கணவரான கஜேந்திரன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் பணியாற்றினார். அவரது திறமையும் நேர்மையும் பின்னாளில் முதல்வர் அண்ணாவின் உதவியாளராக உயரச் செய்தது.

## வரலாற்றில் வாழ்தல்

மிராண்டா கஜேந்திரன் இணையருக்கு இரண்டு பெண் குழந்தைகள். மூத்த மகள் மனோன்மணி மருத்துவரானார். இளைய மகள் அமெரிக்காவில் வசித்தார். இருவரும் அரசுப் பணியில் இருந்தமையால், மிராண்டா அம்மையாரால் பொது வாழ்வில் ஈடுபட முடியவில்லை. குடும்பத்தில் சுயமரியாதைக் கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். கஜேந்திரன் அவர்கள் காலமானபின், தன் மகள்களின் வாழ்வுக்குத் துணையாய் நின்ற மிராண்டா அம்மையார் பின் தனிமை வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். தனது 92-ஆம் வயதில் 2015- ஆம் ஆண்டு காலமானார்.

காலவெள்ளம் ஒரு போராளியின் வாழ்வை திசை மாற்றி இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு கொள்கையாளரின் வாழ்வும், அவர்கள் தீவிரமாகச் செயல்பட்ட காலத்தில் அவர்களது செயல்பாடுகள் ஏற்படுத்திய வரலாற்றுத் தாக்கமும் என்றும் நிலைத்திருக்கும். அப்படித்தான் திராவிட இயக்கத்திற்கான கொடி உருவாக்கப்பட்ட வரலாறு மிராண்டா அம்மையாரின் வரலாற்று உரையை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்.

(வருவார்கள்...)

## ‘பிளேஸ்மென்ட் பிளான்!’




“கல்வி நிறுவனங்களிலேயே மாணவர்களை வேலைக்குத் தேர்ந்தெடுக்கும் நிலை, நம் நாட்டில் உருவாக வேண்டும். அதற்கான தொடக்கம் காண்பது அவசியமாகும்”. 1971- ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட கனவு இது. இன்று நாம் ‘கேம்பஸ் இன்டர்வியூ’எனக் குறிப்பிடும் வேலை வாய்ப்பு முறையை 1971 -ஆம் ஆண்டிலேயே முன்வைக்கிறார் கலைஞர்.

1971-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அண்ணாமலை பல்கலைக்கழகம் கலைஞருக்கு, கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்தது. அப்போது பேசிய அவர், மேல்நாடுகளில் தனியார் தொழில் நிறுவனங்கள், கல்லூரிகளுடன் தொடர்பு கொண்டு, சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் கல்லூரி முடிக்கும் முன்பே வேலை உத்தரவாதம் அளிக்கின்றன. அந்த நிலைக்கு நமது கல்வி நிறுவனங்கள் தயாராக வேண்டும் எனக் குறிப்பிட்டதுடன், உயர்கல்வியில் பாடத் திட்டங்களையும் பயிற்சிமுறைகளையும் அதற்கேற்ப மாற்றினார்.

‘பிளேஸ்மென்ட்’ என இப்போது சாதாரணமாகச் சொல்கிறார்கள் மாணவர்கள். அதற்கு தமிழ்நாட்டில் ‘பிளான்’ போட்டது, கலைஞர்.

## :ப்ளாஷ்பேக்



### இளைஞர் பாசறை!

தந்தைக்கு நெருக்கமான திராவிட இயக்கச் சார்பு கொண்ட தமிழ் ஆசிரியர் ஒருவர்தான் எனக்கு ‘மதியழகன்’ என்று பெயர் வைத்தார். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, 1994-ஆம் ஆண்டு தலைவர் கலைஞரையும் பேராசிரியரையும் சந்திக்கப் புதிதாகக் கழகத்தில் சேர்ந்த இளைஞர் அணி தோழர்களோடு சென்னை சென்றேன். இளைஞர் அணியைச் சேர்ந்த எங்களிடம், ‘இளைஞர்கள் தான் கழகத்தின் கொள்கைத் தூண்கள்’ என்று பாராட்டி ஊக்கப்படுத்தினார். 1997-ஆம் ஆண்டு இளைஞர் அணி பாசறைக் கூட்டங்களைச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து நடத்திட, இச்சந்திப்பு காரணமாக அமைந்தது.



மதியழகன்

**-பூ.மதியழகன், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர், கடலூர் மேற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### நாகை தொகுதி

**1957 தேர்தலில், கழகத்தின் சார்பில், யார் எங்கே போட்டியிடுவது எனப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. நாகப்பட்டினம் தொகுதியில் போட்டியிட விரும்பினார் கலைஞர். தொகுதியைச் சுற்றிப் பார்த்து விட்டு வரச் சொன்னார் கழகச் செயலாளர் அறிஞர் அண்ணா. அதன்படி, வேட்பாளர் பட்டியல் தயாராவதற்கு ஒரு வாரத்துக்கு முன் நாகப்பட்டினம் சென்ற கலைஞர், அங்கு தொகுதி நிலவரங்களை ஆராய்ந்து, கழகத்தினருடன் கலந்து பேசியதுடன், தொண்டர்கள் கூட்டத்தில் அங்கு போட்டியிடப் போவதாகவும் அறிவித்து விட்டார். ஆனால், கலைஞர் குளித்தலையில் போட்டியிட வேண்டும் என அண்ணா விரும்பியதால், அதை ஏற்றுக்கொண்டார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 148




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131